Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, NOVEMBER 10 2023

வெள்ளிக்கிழமை நவம்பர் 10, 2023 | ஒளி: 09 கதிர் 125 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



# “மௌனிகள் கொதிக்கின்றனர்”

உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்கள் தொடர்பில் நீதிபதி ஒருவரை நான் குற்றஞ்சுமத்திய போது, நீதிபதிகள் பற்றிப் பேச முடியாதெனக் கொதித்தெழுந்த இந்த சபையிலுள்ள எம்.பி.க்கள், கிரிக்கெட் சபை மோசடி தொடர்பில் நீதியரசர்களின் பெயர் குறிப்பிட்டுக் குற்றம்சாட்டும்போது மட்டும் மௌனம் காப்பது ஏன்? என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போது மோசடியாளரென குற்றம்சாட்டப்படும் சம்மியை கிரிக்கெட் சபைத்தலைவராக நியமிக்கும்போது, விளையாட்டுத்துறை அமைச்சராக இருந்தவர் நாமல் ராஜபக்ஷ எனவே கிரிக்கெட் சபை மோசடிக்கு முன்னாள் அமைச்சர்களிலிருந்து மாவட்ட அதிகாரிகள் வரை பொறுப்பேற்க வேண்டும். தற்போதைய விளையாட்டுத்துறை அமைச்சர்கூட எல்லாம் முடிந்த பின்னர்தான் விடயங்களை வெளிப்படுத்துகின்றார் என்றார்.

தொடர்ச்சி P2

எதிர்க்கட்சியின் பிரேரணை

# ஏகமனதாக நிறைவேற்றம்

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவன, அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்றது.

எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச இந்த பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றினார்.

இதேவேளை, இந்த பிரேரணையை அமைச்சர் நிமால் சிரிபால டி சில்வா வழிமொழித்து உரையாற்றினார்.

அந்த பிரேரணை மீதான விவாதம் காலை 9.30 மணியளவில் ஆரம்பிக்கப்பட்டு மாலை 5.30 மணி வரை இடம்பெற்றது. இதில் அமைச்சர்கள் பிரதியமைச்சர்கள் எம்.பிக்கள் உரையாற்றினர். எனினும் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் விவாதத்தில் பங்கேற்கவில்லை. இதேவேளை, ஏகமனதாக நிறைவேற்றப்பட்டபோது ஜே.வி.பி. அவையில் இருக்கவில்லை.



# கிளிநொச்சி நீதிமன்றில் முதல் மரண தண்டனை

யது பாஸ்கரன்

கிளிநொச்சி - பிரமந்தனாறு பகுதியில் பெண்ணொருவரை கொலை செய்தார் என குற்றஞ்சாட்டப்பட்டிருந்த சந்தேகநபரை குற்றவாளியாக இனங்கண்ட கிளிநொச்சி மேல் நீதிமன்றம், அவருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. ஒன்பது வருடங்களின் பின்னர், வியாழக்கிழமை (09) இந்த தீர்ப்பு வழங்கப்பட்டது.

தொடர்ச்சி P2



# “குடும்ப ஆட்சி குடும்ப நிர்வாகம்”

நாட்டில் குடும்ப ஆட்சி நடப்பதை போன்று கிரிக்கெட் சபையிலும் குடும்ப நிர்வாகம் இடம்பெறுகிறது.சுமதிபால, தர்மதாச, ரணதுங்க குடும்பங்களே கிரிக்கெட் சபையை நிர்வகித்ததாகத் தெரிவித்த ஜே.வி.பி. எம்.பி.யான விஜித ஹேரத்,

தொடர்ச்சி P2

# கோப்பாய் பகுதியில் மோதல்; 23 பேர் கைது

கோப்பாய் - மத்தி கிராமத்தில் இரண்டு தரப்புகளுக்கு இடையே இரண்டு நாள்களாக நீடித்த வரும் மோதலை கட்டுப்படுத்த கைது செய்யப்பட்ட 3 பெண்கள் உள்ளிட்ட 23 பேரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாய் மத்தி கிராமத்தில் இரண்டு தரப்புகளுக்கு இடையே சில நாள்களாக நீடித்த முரண்பாடு மோதலாக மாறியது.

தொடர்ச்சி P3



# “சாம்பலுக்கு அடியில் தீப்பொறி வெடித்தது”

பாராளுமன்றத்தில் வெடித்தது சட்டத்துறையில் தீப்பொறியாக எரியும் ஒன்றாகும் என நீதித்துறை சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

தொடர்ச்சி P2



# “குதிரை ஓடிய பின்னர் லாயத்தை அடைப்பதா?”

இலங்கை வங்கியின் சுதந்திர சதுக்க கிளையில் உள்ள கிரிக்கெட் நிறுவனத்துக்கு சொந்தமான வைப்பில் இருந்து 2 மில்லியன் டொலரை பெற்றுக்கொள்ள கிரிக்கெட்சபையின் மோசடித் தரப்பினர் முயற்சிக்கிறார்கள்.இதனை உடனடியாக தடுக்க வேண்டும்.இவர்களுக்கு எதிராக உடனடி வெளிநாட்டு பயணத்தடை விதிக்கவேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



# இங்கிலாந்து பிரதமரின் தீபாவளி

தீபாவளி பண்டிகை 12ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை உலக வாழ் இந்து மக்களால் கொண்டாடப்படவுள்ளது. இந்நிலையில், இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் தனது உத்தியோகபூர்வ இல்லத்தில் புதன்கிழமை (08) இரவு தீபாவளிப் பண்டிகையை கொண்டாடியுள்ளார். இந்த விழாவில், இங்கிலாந்தில் வசிக்கும் இந்து சமூதாயத்தை சேர்ந்த பலர் கலந்து கொண்டுள்ளனர். இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக்கும், அவரது மனைவி அக்ஷதா மூர்த்தியும் குத்துவிளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர்.



# மூன்றும் இணைந்தால் வீட்டுக்கு அனுப்பலாம்

கிரிக்கெட் சபை பதவி விலகவேண்டும் என நாங்கள் சபையில் பிரேரணை நிறைவேற்றினாலும் அவர்கள் பதவி விலகப்போவதில்லை. எனவே நிறைவேற்றுத்துறை, பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை ஒன்றிணைந்து செயற்பட்டால் ஊழல் மிக்க கிரிக்கெட் சபை நிர்வாகத்தை வீட்டுக்கு அனுப்பலாம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ‘சம்மி’களை அவசரம் பலப்படுத்தும்



இலங்கை கிரிக்கெட் சபையின் செயற்பாடுகள் தொடர்பில் நாட்டில் பாரிய மக்கள் எதிர்ப்பு உருவாகியுள்ளது. அந்த வகையில் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ள இந்த யோசனையை நிறைவேற்றுவது நாட்டு மக்களின் கருத்துக்களுக்கு கௌரவமளிப்பதாகவே

தொடர்ச்சி P2



# ஜே.வி.பிக்கு ‘ஷம்மி’ பணம்

கிரிக்கெட் சபைத் தலைவர் ஷம்மித சில்வா ஜே.வி.பி நிதிக்கு பணம் கொடுத்துள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது என அரச தரப்பு பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# இந்திய மீனவர்கள் 38 பேரும் விடுவிப்பு

எஸ்.றொசேரியன் லெம்பேட்

தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து இரு வேறு சந்தர்ப்பங்களில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் 38 பேரும் மன்னார் நீதிமன்றத்தினால் வியாழக்கிழமை (9) விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P3

# நுவரெலியாவின் பெருமையை காப்பாற்றுமாறு ஆர்ப்பாட்டம்

செ.திவாகரன், டி.சந்ரு



விலைமதிப்பற்ற வளமாக கருதப்படும் நுவரெலியா தபால் நிலையத்தை சுற்றுலா நோக்கங்களுக்காக பயன்படுத்தும் வகையில் ஜனாதிபதியால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து நுவரெலியா பிரதான நகரில் தபால் நிலையதுக்கு முன்பாக வியாழக்கிழமை (09) எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சி P3

PAGE 1 தொடர்ச்சிகள்



# “மௌனிகள் கொதிக்கின்றனர்”

ஒரு பிரச்சினையை மூடி மறைக்க இன்னொரு பிரச்சினையைக் கிளப்புவது வழமை. தற்போது வற் வரி அதிகரிக்கப்பட்டு அதற்கு மக்கள் எதிர்ப்பு எழுந்துள்ளது. வரவு-செலவுத் திட்டத்தின் பின்னர் இதனைவிட மிகப்பெரிய பல பிரச்சினைகள் வரவுள்ளன. போராட்டங்கள் வலுப்பெறவுள்ளன. மருத்துவர்கள் தொடர் பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்றனர். இந்நிலையில், நாட்டு மக்களைத் திசை திருப்ப கிரிக்கெட் சபை மோசடி பெரிதுபடுத்தப்படுகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனவே இந்த கிரிக்கெட் சபை மோசடி தொடர்பான விவாதத்தைப் பார்த்து மக்கள் ஏமாந்து விடக்கூடாது எனக் கேட்டுக்கொண்டார்.

இது ஒருபுறமிருக்க மட்டக்களப்பு மாவட்டத்தில் எனக்கு எதிராக, என்னைப் பெரிய வில்லனாக்க, இனவாதியாக்க முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினரை என்னால் கட்டுப்படுத்த முடியுமா? நான் என்ன இராணுவத் தளபதியா? பொலிஸாரைக் கட்டுப்படுத்த நான் என்ன பொலிஸ் மா அதிபரா? எனவும் கேள்வி எழுப்பினார்.

# கோப்பாய் பகுதியில் மோதல்...

இந்த மோதலினால் பல ஆயிரம் ரூபாய் பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளன. குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது இரண்டு தரப்பிலுமாக 3 பெண்கள் உள்ளிட்ட 23 பேர் கைது செய்யப்பட்டனர்.

நபர்களைத் தாக்கியமை, சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை மற்றும் பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பில் 23 பேருக்கும் எதிராக முதல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் வியாழக்கிழமை (09) முற்படுத்தப்பட்டனர்.

பொலிஸாரின் விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, 23 பேரையும் எதிர்வரும் 22ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# “குடும்ப ஆட்சி குடும்ப நிர்வாகம்”

விளையாட்டுத்துறை அமைச்சர் உண்மை நோக்கததுடன் தான் ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்குள்ளான கிரிக்கெட் சபையை நீக்கி இடைக்கால குழுவை நியமித்தார். ஆனால், அந்த இடைக்காலக்கு ழுவில் நீதியமைச்சரின், ஆளுநரின் மகன்களை அவர் நியமித்தமை முறையற்றது எனவும் கூறினார்.

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடி ஒன்றும் புதிதல்ல,காலம் காலமாக மோசடி இடம்பெறு வதுதான்.

கிரிக்கெட் சபையின் மோசடி மாபியாக்களினால் விளையாட்டு வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இலங்கை கிரிக்கெட் அணி சர்வதேச மட்ட போட்டிகளில் தோல்வியடைந்ததை தொடர்ந்து விளையாட்டுத்துறை அமைச்சர் கிரிக்கெட் சபையின் ஊழல் மோசடியை பகிரங்கப்படுத்தியுள்ளார் என்றார்.



# மூன்றும் இணைந்தால் வீட்டுக்கு அனுப்பலாம்

இடம்பெற்ற ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதத்தை பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (11) ஆரம்பித்துவைத்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையில் கிரிக்கெட் விளையாட்டு மிகவும் பலவீனமான நிலைக்கு சென்றுள்ளது. இதற்கு இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெற்றுவரும் ஊழல் மோசடிகளே பிரதான காரணம். எனவே இந்த கிரிக்கெட் சபை நிர்வாகத்தை உடனடியாக நீக்க வேண்டும். அதேபோன்று கிரிக்கெட் சங்கங்களை நீக்க வேண்டும்.

இந்த கிரிக்கெட் சபை நிர்வாகத்தில் இருப்பவர்கள் அனைவரும் ஊழல் மோசடி காரர்கள். இவர்கள் சர்வதேச கிரிக் கெட் கவுன்சிலையும் கையில் போட்டுக்கெ ாண்டிருக்கின்றனர். இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்போது அரசியல் தலையீடு மேற்கொள்வதாக சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கு முறையிட்டு அதனை தடுக்கின்றனர். அதனால் பாராளுமன்றத்தில் இருக்கும் 225பேரும் ஒன்றிணைந்து இதன் உண்மைத்தன்மையை சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலுக்கு தெளிவு படுத்த வேண்டும் என்றார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விளையாட்டுத்துறை அமைச்சு ஆலோசனைக்குழு கூட்டத்துக்கு இலங்கை கிரிக்கெட் சபை வரவில்லை. பாராளுமன்றம், ஜனாதிபதியை விட உயர்ந்த நிலையில் இருப்பதாகவே இவர்கள் நினைத்து க்கொண்டிருக்கிறனர்.

69 இலட்சம் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதி மக்களின் போராட்டத்தின் மூலம் வீட்டுக்கு சென்றார். எனவே, கிரிக்கெட் சபையை வீட்டுக்கு அனுப்புவது பெரிய விடயமல்ல என்றார்.





# கிளிநொச்சி நீதிமன்றில் முதல் மரண தண்டனை

மாத்தளை பகுதியைச் சேர்ந்த இராஜசுலோஜனா என்ற பெண்ணை, 2014ஆம் ஆண்டு ஏப்ரல் 12ஆம் திகதி கத்தியால் குத்திக் படுகொலை செய்து கிணற்றுக்குள் தள்ளிவிட்டுள்ளார். அதன்பின்னர் அப்பெண் சடலமாக மீட்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த கிளிநொச்சி பொலிஸார் மற்றும் CID யினர் சடலம் மீட்கப்பட்ட பகுதிக்கு அயலில் உள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்கள அலுவலகத்தில் பணியாற்றிய படுகொலைச் செய்யப்பட்ட பெண்ணின் காதலனை கைது செய்தனர்.

அத்துடன், படுகொலைக்கு பயன்படுத்திய கத்தி, அந்தப் பெண், இறுதியாக வைத்திருந்த அலைலைபேசி மற்றும் உடைகள் என்பவற்றை நீதிமன்றில் சமர்ப்பித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபருக்கு எதிராக கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டு பின்னர் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் கிளிநொச்சி மேல் நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்குக்கான தீர்ப்பை, கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.எம்.ஏ சகாப்தீன் வழங்கினார்.

தீர்ப்பு வாசித்துக் காட்டப்பட்டது. குற்றவாளியின் இறுதிக் கருத்தும் கேட்கப்பட்டது. தான் நிரபராதி என்றார். அதன்பின்னர், நீதிமன்றத்தில் இருந்த அனைவரும் எழுந்து நின்றனர். அனைத்து மின்விளக்குகளும் அணைக்கப்பட்டன. அதன்பின்னர், தீர்ப்பின் கீழ் கையொப்பமிட்டு, பேனையை நீதிபதி உடைத்து வீசினார்.

கிளிநொச்சி மேல் நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட முதலாவது மரண தண்டனை தீர்ப்பு இதுவாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# “குதிரை ஓடிய பின்னர் லாயத்தை அடைப்பதா?”

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகார சபையின் தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய சட்ட கட்டமைப்பை சட்டமூலம் ஊடாக அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) நடைபெற்றது. இதன்போதே மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

நிதி மோசடி குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளவர்கள் நாட்டில் இல்லை. ஆனால், வைப்பில் உள்ள நிதியை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இதனை தடுக்க வேண்டும். இவர்களுக்கு எதிராக பயணத்தடை விதிக்க பாராளுமன்றத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

கிரிக்கெட் சபையின் மோசடி தொடர்பில் பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு எதிராக துரிதமாக நடவடிக்கை எடுக்காமல் இருப்பது தவறு குதிரை ஓடிய பின்னர் லாயத்தை அடைப்பது பயனற்றது என்றார்.



# ஜே.வி.பிக்கு ‘ஷம்மி’ பணம்

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இப்போது நாம் செய்வதற்கு ஒன்றுமில்லை. கிரிக்கட் சபை இராஜினாமா செய்யாது. அதை எங்களால் அகற்ற முடியாது. எனவே, இந்த சட்டத்தை மாற்ற வேண்டும் என்ற பிரேரணையை ஜனாதிபதி கொண்டு வந்தார்.

இந்த கிரிக்கெட் நிர்வாக சபை ஒரு மோசடி கூடாரம் என்பது நம் அனைவரின் கருத்து. எனவே இதை அகற்ற வேண்டும். ஒவ்வொருவருடைய அரசியல் இலக்குகளை அடைய முயலாமல் முழு நாட்டுக்கும் முன்னுதாரணமாக இருக்க நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

ஜே.வி.பி.க்கு கிரிக்கெட் நிதியில் இருந்து பணம் வழங்கப்பட்டதாக எழுந்த சந்தேகம் மேலும் உறுதியாகியுள்ளது. கிரிக்கட்சபைத் தலைவர் ஷம்மித சில்வா, ஜே.வி.பி. நிதிக்கு பணம் கொடுத்துள்ளதாக எமக்கு தகவல் கிடைத்துள்ளது. ஆனால், என்னால் நிரூபிக்க முடியாது என்றார்.



# “சாம்பலுக்கு அடியில் தீப்பொறி வெடித்தது”

கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) தெரிவித்தார்.

தனிமைப்படுத்தப்பட்ட சம்பவம் ஒன்றின் காரணமாக நீதித்துறை தொடர்பில் சந்தேகங்களை எழுப்ப வேண்டாம் என அனைத்து மக்களையும் கேட்டுக் கொள்வதாக தெரிவித்த அமைச்சர், நேற்றைய சம்பவம் தொடர்பில் நீதித்துறையை காயப்படுத்த தேவையில்லை எனவும் தெரிவித்தார். இங்கு சட்டமன்றத்திற்கும் நீதித்துறைக்கும் இடையே எந்த முரண்பாடும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்திற்கு எதிரான தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு சட்டமன்றத்திற்கும் நீதித்துறைக்கும் இடையே மோதல் இல்லை. அத்தகைய பரிந்துரை எதுவும் இல்லை. கட்சி பேதமின்றி பாராளுமன்றம் தீர்மானம் எடுத்து ள்ளது. பொது கருத்துடன் உடன்படுங்கள். மக்கள் கருத்து பாராளுமன்றத்தில் எதிரொலித்தது.

ஒரு நீதிமன்றம் வழங்கிய உத்தரவு குறித்து சில கருத்துகள் உள்ளன. இது நிறைவேற்று அதிகாரத்திற்கும் நீதித்துறைக்கும் இடையிலான மோதலாக விளங்கக்கூடாது என நம்புகிறேன். இன்றைய பிரேரணையானது மக்களின் அபிப்பிராயத்தின் சக்திவாய்ந்த நிரூபணமாகும் என்றார்.

நீதித்துறை தொடர்பான தனிமைப்படுத்தப்பட்ட வழக்கு குறித்து இந்த பாராளுமன்றம் நீண்ட நேரம் விவாதித்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

இந்த விவகாரம் சட்டத்தரணி சமூகத்தில் சாம்பலுக்கு அடியில் எரிவது போல் பரபரப்பாக பேசப்பட்டு வந்தது. அதுதான் வெடித்தது.

ஆனால் கதை எவ்வாறு தெரிவிக்கப்பட்டது பல நீதிபதிகள் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.



# ‘சம்மி’களை அவசரம் பலப்படுத்தும்

அமையும். இந்த மக்கள் கருத்தை பிரபலப்படுத்துவது தவிர வேறு எந்த சட்டபூர்வ உரிமையும் எமக்கு கிடையாது என அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா தெரிவித்தார்.

அவசரமாக எதையாவது செய்யப்போய் அதன் மூலம் ‘சம்மி’ க்களையே பலப்படுத்த நேரிடும். எனவே, சரியாக சிந்தித்து, அதற்கான சட்டத்தை பலமானதாக உருவாக்க விளையாட்டுத் துறை சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும் என்றார்.

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதுள்ள கிரிக்கெட் நிர்வாக சபையை தயவு செய்து பதவி விலகுமாறு நாம் கேட்டுக் கொள்கின்றோம். அதேவேளை, இது போன்ற செயற்பாடுகள் இனியும் இடம்பெறாமல் உரிய நடவடிக்கை எடுப்பதும் அவசியம்.

தற்போதுள்ள கிரிக்கெட் நிர்வாக சபை ஊழல் நிறைந்தது. அவர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு சட்ட ரீதியான முறைமை தயாரிக்க வேண்டியது அவசியம். இருட்டில் கைகளை நுழைத்து இந்த பிரச்சினைக்கு பதில் தேட முடியாது என்றார்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# இந்திய மீனவர்கள் 38 பேரும் விடுவிப்பு

2 படகுடன் இந்திய மீனவர்கள் 15 பேர், கடந்த மாதம் 16 ஆம் திகதியும், 3 படகுகளுடன் இந்திய மீனவர்கள் 23 பேர் கடந்த 29 ஆம் திகதி தலைமன்னார் கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

குறித்த மீனவர்கள் 38 பேரும் வியாழக்கிழமை(9) வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட நிலையில் மன்னார் நீதவான் முன்னிலையில் வியாழக்கிழமை(9) ஆஜர் படுத்தப்பட்டனர்.

அந்த மீனவர்களுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுக்கள் மன்றில் முன்வைக்கப்பட்டன. ஒவ்வொரு குற்றச்சாட்டுக்கும் தலா 6 மாத சிறை தண்டனையும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

மேலும் குறித்த 5 படகுகளின் உரிமையாளர்களும் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு இந்திய துணைத் தூதரகம் ஊடாக படகு உரிமையாளர்களுக்கு அறிவிக்கும் படி நீதவான் கட்டளையிட்டார். வழக்கு தொடுனரினால் முதலாவது குற்றவாளியாக படகுகளின் உரிமையாளர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

விடுதலை செய்யப்பட்ட 38 மீனவர்களும் மிகிரியாகம தடுப்பு முகாமிற்கு அனுப்பப்பட்டு இந்திய தூதரக அதிகாரிகள் ஊடாக



நாட்டிற்கு அனுப்பி வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படும் போது அவர்களின் உடமையில் இருந்த சில சான்றுப் பொருட்களை உரிமையாளர்களிடம் மீண்டும் ஒப்படைக்குமாறு அதிகாரிகளுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# சப்ரகமுவ ஊவாவுக்கு திங்கள் விடுமுறை

ஊவா மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில் உள்ள உள்ள தமிழ் பாடசாலைகளுக்கு நவம்பர் 13 ஆம் திகதி விடுமுறை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளன. நவம்பர் 12 ஆம் திகதி தீபாவளியை அடுத்தே இந்த விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மிலின் ஆலோசனையின் பேரில் ஊவா மாகாண கல்விச் செயலாளர் திரு.காமினி மஹிந்தபால ஜோபியாஸ் சுற்றுநிருபம் மூலம் பாடசாலைகளுக்கு அறிவித்துள்ளார்.

இதேவேளை, சப்ரகமுவ மாகாணத்திலுள்ள தமிழ் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்க வேண்டுமென இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் அமைப்பாளர் ரூபன் பெருமான் சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சாமர பமுனுஆராய்ச்சியிம் வேண்டுகோள் விடுத்தார்.

அத்துடன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் மற்றும் நீர் வழங்கள், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஜீவன் தொண்டமான் அவர்களிடமும் இவ்விடயம் தொடர்பாக கவனம் செலுத்துமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். அதற்கமைய மாகாண ஆளுநர் அவர்கள் விடுமுறை வழங்குவதற்கு உறுதியளித்துள்ளார்.

# நுவரெலியாவின் பெருமையை காப்பாற்றுமாறு ஆர்ப்பாட்டம்

நுவரெலியா தபால் நிலையத்தை தாஜ் சமுத்ரா ஹோட்டல் நிறுவனத்துக்கு ஒப்படைக்கவே யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதற்கு பலரும் எதிர்ப்பு காட்டுவதுடன் பிரதானமாக நுவரெலியா மக்கள் பல்வேறு வழிகளில் தமது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

இப்போராட்டத்தில் தொழிற்சங்கங்கள், வெகுஜன அமைப்புகள், சிவில் செயற்பாட்டாளர்கள் ,

சட்டத்தரணிகள் உள்ளிட்ட நாட்டின் அனைத்து நகரங்களிலும் ஏராளமான தபால் நிலைய ஊழியர்கள் போராட்டத்துடன் இணைந்திருந்தனர். போராட்டக்காரர்கள் கறுப்புக் கொடி காட்டிய வண்ணம் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நுவரெலியா நகரில் உள்ள வர்த்தக நிலையங்களை மூடிய ஆதரவளித்தன. வர்த்தக சங்கம் , நுவரெலியா முச்சக்கர வண்டிகள் சங்கம் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கினர்.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் போராட்டக்காரர்கள் தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தினர்.




கிரிக்கெட் சபைக்கு

# தடை விதித்தால் 225 பேரும் பொறுப்பு



கிரிக்கெட் சபை தொடர்பில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் சபை இலங்கை கிரிக்கெட் சபைக்கு தடை விதித்தால் அதற்கு இந்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்பு கூற வேண்டும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவன, அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட நான்கு பேர் கொண்ட அமைச்சரவை உபகுழு ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளது இந்த அமைச்சரவை உபகுழுவின் நோக்கம் தேசிய அணியையோ அல்லது நிர்வாகத்தையோ தேர்ந்தெடுப்பது அல்ல .கிரிக்கெட் சபைக்கு புதிய யாப்பை உருவாக்கி அதனை சிறந்த முறையில் முன்னெடுத்து செல்வதற்கேயாகும்.

இதேவேளை இலங்கை கிரிக்கெட் சபை தொடர்பில் இங்கு பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளன. ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை முன்வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு முன்வைக்கப்பட்டுள்ள தீர்மானங்களின் அடிப்படையில் சர்வதேச கிரிக்கெட் சபை இலங்கை கிரிக்கெட் சபைக்கு தடை விதிக்க முடிவு செய்தால், அதற்கு இந்த பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் பொறுப்பு கூற வேண்டும் என்றார்.

# குழப்பத்தின் பின்னணியில் இந்திய ஆதிக்கம்

## விமல் குற்றச்சாட்டு: கெத்தாராம குறித்து கேள்வி

இலங்கை கிரிக்கெட் சபையின் குழப்பத்தின் பின்னணியில் இந்தியாவின் ஆதிக்கம் இருப்பதாக தேசிய சுதந்திர முன்னையின் தலைவரும் சுயாதீன எதிரணி எம்.பி.யுமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவன, அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ.சி.சி. தலைவர் தனியார் விமானத்தில் வருகைத் தந்து, ஜனாதிபதி மற்றும் ஜனாதிபதியின் பிரதானி சாகல ரத்னாயக்கவை சந்தித்துள்ளார். இதன்போது, இலங்கை கிரிக்கெட் சபைக்கு உள்ள அநாவசிய அழுத்தங்களை குறைக்க நடவடிக்கை எடுக்குமாறு அவர் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார் என எமக்கு தெரியவந்துள்ளது. அவரைப் பொறுத்தவரை இலங்கைக் கிரிக்கெட் சபையை பாதுகாக்க வேண்டும்.

உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இடம்பெற சிறிது காலத்திற்கு முன்னர் எதற்காக எல்.பி.எல். போட்டியை நடத்த வேண்டும்? இதனால்தான் சிறந்த வீரர்கள் காயமடைந்தார்கள். உலகக் கிண்ண தொடரிலும் இவர்களால் விளையாட முடியாமல் போனது.

ஐ.சி.சி.யின் தலைவர்தான் எல்.பி.எல். போட்டியை உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் இடம்பெற சிறிது காலத்திற்கு முன்பாக நடத்துமாறு இலங்கை கிரிக்கெட் சபைக்கு பணித்தாரோ தெரியவில்லை.

கிரிக்கெட் விளையாட்டில் இந்தியாவின் ஆதிக்கம் அதிகரித்துள்ளது. எனவே இலங்கை கிரிக்கெட் சபையின் குழப்பத்தின் பின்னணியில் இந்தியாவின் ஆதிக்கம் இருப்பதாக சந்தேகிக்க வேண்டியுள்ளது என்றார்.

கொழும்பு கெத்தாராம விளையாட்டரங்கில் இந்திய வீரர்களின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு மாத்திரம் தனியான வலயம் இருப்பதாக தெரிவித்த அவர், இலங்கை வீரர் ஒருவர் கூட அந்த பிராந்தியத்திற்குள் நுழைய முடியாது . இந்த உண்மை பலருக்கும் தெரியாது என்றார்.



# பணத்தில் மீதுதான் அக்கறை உள்ளதா


## ரியர் அட்மிரல் சரத் வீரசேகர எம்.பி கேள்வி

தனது தாய் நாட்டுக்காக அன்றி பணத்திற்காக இலங்கை கிரிக்கெட் வீரர்கள் எல்.பி.எல். இல் விளையாடினார்கள்.எனவே இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்கு பணத்தில் மீதுதான் அக்கறை உள்ளதா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளதென முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பது அமைச்சரும் அரச தரப்பு எம்.பி.யுமான ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவன, அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதம் பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிரிக்கெட் அணி வீரர்களுக்கு தாய் நாடு அக்கறை உள்ளதா அல்லது அவர்களுக்கு வெறும் பணத்தில் மீதுதான் அக்கறை உள்ளதா எனும் சந்தேகம் இன்று மக்களிடத்தில் ஏற்பட்டுள்ளது. ஏனெனில், அமைச்சர் ரொஷான் ரணசிங்க உலகக் கிண்ணத் தொடர் இருப்பதால், எல்.பி.எல். போட்டிகளில் விளையாட வேண்டாம் என கிரிக்கெட் அணி வீரர்களுக்கு அறிவித்திருந்த போதும் பணத்திற்காக சில வீரர்கள் விளையாடினார்கள்.

இவ்வாறு விளையாடிய சிறந்த வீரர்களில் ஐவர் காயமடைந்தனர். இதனால், உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாட முடியாத நிலைமை இவர்களுக்கு ஏற்பட்டது.தனது தாய் நாட்டுக்காக அன்றி பணத்திற்காக இவர்கள் எல்.பி.எல்.இல் விளையாடினார்கள் என்றார்.



# நீதியரசருக்கு எதிராக குற்றப்பிரேரணை

## கொண்டுவருமாறு கிரியெல்ல எம்.பி வலியுறுத்தல்



இலங்கை கிரிக்கெட்டின் இடைக்கால குழுவுக்கு இடைக் காலத்தடை தீர்ப்பு வழங்கிய நீதியரசருக்கு எதிராக குற்றப்பிரேரணை கொண்டுவர பாராளுமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிக்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

கிரிக்கெட் சபை இடைக்கால குழுவுக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்து ள்ளதைப் பயன்படுத்திக் கொண்டு கிரிக்கெட் சபையில் இருப்பவர்கள் தற்போது பாரியளவில் பொருட்களை அங்கிருந்து அகற்றி வருவதாகவும் வங்கிகளில் இருந்து கோடிக்கணக்கில் பணத்தை மீளப்பெறுவதாகவும் எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. எனவே ஊழல், மோசடி தொடரும் வகையில் தீர்ப்பளித்த நீதியரசருக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில் வியாழக்கிழமை (09) இடம்பெற்ற ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கை கிரிக்கெட் சபை ஊழல் மோசடி மிக்கது என முழு இலங்கைக்கும் தெரியும். அதனால் நீதிமன்றத்துக்கு இது தெரியாது என தெரிவிக்க முடியாது. அப்படி இருக்கும்போது நீதிமன்றம் விளையாட்டுத்துறை அமைச்சரிடம் இது தொடர்பாக விளக்கம் கோராமல் இடைக்காலத் தடை விதித்தமைவுக்கு நீதியரசரின் உறவு முறைதான் காரணமா என கேள்வி எழுப்பியுள்ளார்.

## பயணிகள் சொகுசு கப்பல் மீண்டும் சேவைக்கு வரும்




தமிழகத்தின் தூத்துக்குடியில் இருந்து இலங்கையின் காங்கேசன்துறைக்கு பயணிகள் சொகுசு கப்பல் போக்குவரத்து மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயணிகள் சொகுசு கப்பல் போக்குவரத்து எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் ஆரம்பமாகவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தூத்துக்குடி வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தை மையமாகக் கொண்டு, தூத்துக்குடி - காங்கேச ன்துறை, தூத்துக்குடி - கொழும்பு, ராமேஸ்வரம் - தூத்துக்குடி - கன்னியாகுமரி இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படவுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்காக மும்பையில் நடந்த சர்வதேச கடல்சார் உச்சி மாநாட்டில் டுபாயில் உள்ள தனியார் நிறுவனம் மற்றும் வ.உ.சிதம்பரனார் துறைமுக ஆணையம் இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக, தூத்துக்குடி - காங்கேசன்துறை இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து எதிர்வரும் ஜனவரியில் தொடங்கப்பட உள்ளதுடன், இதற்கான கப்பல் விரைவில் தூத்துக்குடிக்கு வரவுள்ளதாகவும் இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

இந்த கப்பலானது தினசரி 120 கடல் மைல் தொலைவை 3 முதல் 4 மணி நேரத்தில் கடக்கும் எனவும் 400 பயணிகள், 40 கார்கள், 28 பஸ்களை கொண்டு செல்ல முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாதாரண கட்டணமாக 6,000 இந்திய ரூபாவும், வர்த்தக வகுப்பு பயணிகளிடம் 12,000 இந்திய ரூபாய் கட்டணமும் அறவிடப்படவுள்ளது.

சுற்றுலாவிற்கு சொந்தமான கார்கள் மற்றும் பஸ்களில் செல்பவர்கள், தங்கள் கார்கள் மற்றும் பஸ்களையும் கப்பலில் ஏற்றி இலங்கைக்கு கொண்டு சென்று, மீண்டும் திரும்பி வர முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொகுசு கப்பலில் வரி இல்லாத விற்பனைக் கடைகள், ஹோட்டல்கள் உள்ளிட்ட பல்வேறு நவீன வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

இந்த கப்பலில் பயணிக்க விமானப் பயணத்திற்கு தேவைப்படுவதைப் போன்று விசா, கடவுச் சீட்டு இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

பயணிகள் 80 கிலோகிராம் நிறையை மட்டும் தங்களுடன் எடுத்துச்செல்ல அனுமதிக்கப்படுவார்கள் என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## ஐந்தாவது தேசிய இளைஞர் பாராளுமன்றத்தின் 4ஆவது அமர்வு

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 5ஆவது தேசிய இளைஞர் பாராளுமன்றத்தின் 4ஆவது அமர்வு 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 28 மற்றும் 29ஆம் திகதிகளில் ஜனாதிபதி செயலகத்தின் பழைய பாராளுமன்ற மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

“2024 வரவு-செலவுத் திட்டத்திற்கான இளைஞர் முன்மொழிவுகள்” என்ற தொனிப்பொருளின் கீழ் முதல்நாள் விவாதம் நடைபெற்றதோடு, இரண்டாவது நாள் விவாதம் “காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதில் இலங்கை இளைஞர்களின் பங்கு” என்ற தொனிப்பொருளில் நடைபெற்றது.

முதல் நாள் அமர்வில் பிரதம அதிதிகளாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோஹன திசானாயக்க மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்ன ஆகியோர் கலந்து கொண்டதுடன், இரண்டாவது நாள், பிரதம அதிதிகளாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் ரொஷான் ரணசிங்க, மற்றும் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தலைவர்/ பணிப்பாளர் நாயகம் பசிந்து குணரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும், விசட அதிதிகளாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கே. மகேசன், சட்டக்கல்லூரி அதிபர் கலாநிதி அதுல பத்திநாயக்க, தேசிய இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர் பிரதீப் மாபலகம ஆகியோர் கலந்துகொண்டனர்.



## பஸ் வண்டி தீவைத்து எரிப்பு



ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு - ஆரையம்பதி பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தனியார் பஸ் வண்டி இனம் தெரியாதவர்களால் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.ம்.எஸ்.ஏ. ரஹீம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு -பொத்துவில் வீதியில் சேவையில் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டி புதன்கிழமை (08) மாலை ஆரையம்பதி பிரதேசத்தில் நிறுத்தி வைத்துவிட்டு, உரிமையாளர் தனது சொந்த இடத்திற்கு சென்றுள்ளார். வியாழக்கிழமை (09) அதிகாலை குறித்த பஸ் வண்டி தீப்பற்றி எரிவதாக கிடைத்த தகவலை அடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார், பார்வையிட்டபோது, பஸ் வண்டி முற்றாக எரிந்து சாம்பலாகி உள்ளது. இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

## “நானாட்டானில் மேய்ச்சல் நிலம் போதாது”

ரொசேரியன் லெம்பெட்




மன்னார்- நானாட்டான் பிரதேசத்தில் உள்ள கால்நடை களுக்கு ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் நிலம் தற்போது காணாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, மாற்று வழியை அமைக்க வேண்டிய தேவை உள்ளது என நானாட்டான் பிரதேச செயலாளர் மா.ஸ்ரீஸ்கந்த குமார் தெரிவித்துள்ளார்.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலத்தை அடையாளப்படுத்துவது தொடர்பான பிரச்சனை நீண்டகாலமாக இழுபறி நிலையில் உள்ளது.

நானாட்டான் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கால்நடைகளை மேய்ச்சலுக்காக மாந்தை மேற்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள பகுதிகளுக்கு கொண்டு செல்வது சம்பந்தமான கூட்டம் செவ்வாய்க்கிழமை (7) நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் தலைவர் மற்றும் பிரதிநிதிகளும் கால்நடை வளர்ப்பாளர்கள் கலந்து கொண்டார்கள். கால் நடைகளை மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள ‘பெருவெளி’ பகுதிக்கு கொண்டு செல்வது தொடர்பாக ஏற்கனவே கலந்துரையாடப்பட்டு எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமைவாக நானாட்டான் பிரதேச செயலாளர், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர், இலுப்பக்கடவை கமக்கார அமைப்பின் தலைவர் போன்றவர்களுடன் கலந்துரையாடப்பட்டு குறித்த விடயங்கள் தெளிவு படுத்தப்பட்ட பின்னர் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ள பட்டிருக்கின்றன.

## பொதுமக்கள் மும்முரம்







ஞாயிற்றுக்கிழமை (12) மலரவிருக்கும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் பொதுமக்கள் புத்தாண்டு கொள்வனவில் ஈடுபடுவதை காணமுடிகிறது. குறிப்பாக யாழ். மாநகர சபைக்குட்பட்ட நகர பகுதி, முனிஸ்வரா வீதியில் அங்காடிக்கடைத் தொகுதிகளில் புத்தாடை கொள்வனவில் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை, மலையகத்தின் ஹட்டன் உள்ளிட்ட நகரங்களிலும் பொதுமக்கள் தீபாவளியைக் கொண்டாடுவதற்கு தயாராகிக்கொண்டிருக்கின்றனர்.
புகஜிந்தன், சுதத் எச்.எம்.ஹேவா







# மூன்று தூண்களுக்கு இடையில் முரண்படும் நிலைமை

நாட்டில் ஜனநாயகம் நிலவ வேண்டுமாயின், ஜனநாயகத்தின் நான்கு தூண்களும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்டுக்கொள்ளக்கூடாது. அதற்கான சந்தர்ப்பத்தையும் ஏற்படுதிக்கொடுக்கக் கூடாது. எனினும், பாராளுமன்றத்தில், வியாழக்கிழமை (09) இடம்பெற்ற பிரேரணை மீதான விவாதத்தை பார்க்குமிடத்து, பல உறுப்பினர்களின் உரைகளின் சாராம்சம், முரண்பாட்டை தோற்றுவிப்பதாய் அமைந்திருந்தன.

ஊழல் மிக்க இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் அதிகாரசபையின் தலைவர் உட்பட நிர்வாகசபை தலைவர் உட்பட நிர்வாக சபையை நீக்குதல் மற்றும் புதிய கட்டமைப்பைப்பொன்றை சட்டம் மூலம் அனுமதிக்கும் பிரேரணை மீதான விவாதமே நடைபெற்றது. இதன்போது, ஒருசில உறுப்பினர்களின் உரை, நீதித்துறையின் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாய் அமைந்திருந்தன.

இதனை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், மிகத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தார். நீதிமன்றங்களில் இடம்பெறும் வழக்குகள் தொடர்பில் நேரடியாகச் சுட்டிக்காட்ட முடியாது. நீதியரசர்கள், நீதிபதிகள் மற்றும் நீதவான்களின் பெயர்களைக் குறிப்பிட்டு உரையாற்ற முடியாது. பாராளுமன்றத்துக்கு வெளியே அவ்வாறு உரையாற்றினால், நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டின் கீழ், அவர்களுக்கு எதிராகத் தண்டனை வழங்கப்படும்.

இதற்கு முன்னரும் பலருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளன.

அவ்வாறானவர்களுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு அளித்து விடுவித்துள்ளார். எனினும், நீதிமன்றத்தைத் தூற்றும் செயற்பாடுகள் பாராளுமன்றத்துக்குள் முன்னெடுக்கப்படுகின்றன. விளையாட்டுத்துறை அமைச்சர் ரொசான் ரணசிங்க, இலங்கை கிரிக்கெட் சபையில் இடம்பெறும் ஊழல், மோசடிகள் தொடர்பில், புதன்கிழமை (08) உரையாற்றியபோது, நீதியரசர்களின் பெயர்களைக் குறிப்பிட்டார். அப்போது, சபையில் இருந்தவர்கள் எவருமே, ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பி, அக்கிராசனத்தின் கவனத்துக்குக் கொண்டுவரவில்லை.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உள்ளிட்டவர்கள், நீதிபதிகளின் பெயர்களை உச்சரித்தவுடனேயே, கதிரையின் நுனியில் அமர்ந்திருந்து எழும்புவதைப் போல, ஒருசில நொடிகளுக்குள் எழுந்து, ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பிவிடுவர். இவ்வாறான சந்தர்ப்பங்களில்தான், சட்டம் சகலருக்கும் சமமானது அல்ல என்பது அம்பலமாகின்றது. சட்டவாக்க சபையிலேயே இவ்வாறான பாகுபாடு என்றார். சாதாரண இடங்களில் எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது.

விளையாட்டு சட்டங்களை மட்டுமன்றி, பல சட்டங்களை, காலவோட்டத்துக்கு அமைய திருத்தவேண்டும். எனினும், ஆட்சியில் இருப்பவர்கள் தங்களுக்குத் தேவையான வகையில் சட்டங்களை திருத்திக்கொள்வதும், பின்னர் ஆட்சிக்கு வருவோர், தங்களுக்கு ஏற்ப சட்டங்களைத் திருத்துவதும் கைவிடப்படவேண்டும். இதனூடாக காலமும், பணமும் வீண் விரயம் செய்யப்படுகின்றது. நீண்ட தூரநோக்கத்துடன் திருத்துவதே காலத்தின் தேவையாகும்.

இதனிடையே, உறுப்பினர்கள் சிலரின் கருத்துகள், சட்டவாக்கம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறைக்கு இடையில் முரண்படும் வகையில் அமைந்திருந்தன. ஆகையால், எம்.பிக்களின் உரைகள், நிலையியற் கட்டளைகளை மீறுவதாக அமைந்திருந்தால், அவைதொடர்பில், அக்கிராசனம் சமமாகக் கவனம் செலுத்துவது அவசியம்.


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் மனவலிமையையும் அன்பின் ஆழத்தையும் அவரின் மன்னித்தல் பண்பின் ஊடாகப் புரிந்துகொள்ள முடியும். மன்னித்தல் ஒருவரின் வியாபகமான நெஞ்சத்தின் இயல்பைக் காட்டி நிற்கும். மக்கள் இவர்களோடு இணைவார்கள்.

நண்பர்கள் மத்தியில், சின்னத்தவறுகள் நேர்ந்தாலும் பிரிந்துவிடும் சூழ்நிலைகள் வருவதுண்டு. இந்நிலையில் ஒருவர் செய்த துரோகத்தை, அவரால் பாதிக்கப்பட்டவர் மன்னிப்பது பெரிய விடயம்.

கோபம், குரோதம் போன்றவற்றை எவரும் நிலையாக மனதில் வைத்திருத்தலாகாது. தவறுகளை அடிக்கடி செய்பவர்கள், தாங்கொணா இம்சைகள் செய்பவர்கள் போன்றவர்களைக்கூட பெரும்தன்மையுடன் மன்னித்துவிடும் நபர்கள், பயத்தால் அல்ல, தங்களின் பலத்தைக் காட்டாமல் மன்னிப்பது, அவர்களது சகிப்புத் தன்மையுடன் கூடிய மேலான பண்பாகும்.

இன்று மக்களிடையே குரோதம், வன்மம் எல்லாம் பொறாமையால் மெலெழுகின்றன. தங்களைவிட எவரும் உயர்நிலைக்கு வரக்கூடாது எனும் எண்ணத்துடன் இயங்குபவர்கள் ஏராளம்.

எளியவர்களை வதைத்தலாகாது. மேன்மையான உள்ளம் கொண்டவர்கள், யாவரையும் அரவணைப்பார்கள். இணைந்து வாழத் தெரியாதவர்கள் தனிமைப்படுவார்கள்.

நன்றி– பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் 26

# பண்டா- செல்வா: குழறுபடி அரசியல்



**தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ**

சிங்களம் மட்டுமே சட்டத்தை எதிர்த்து திருகோணமலையில் அமைதிப் போராட்டத்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அறிவித்தார். அமைதியான முறையில் அரசியல் உரிமைகளை வெல்வது என்ற நோக்கில் அவர் செயல்படுவதால் அவரை 'ஈழத்து காந்தி' என்று தமிழரசுக் கட்சி போற்றியது. தமிழரசுக் கட்சிக்கு ஒரு விக்கிரகம் தேவைப்பட்டது. அவ்விக்கிரகமாகவும் 'தந்தையாகவும்' சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் உருவாக்கப்பட்டார். யாழ்ப்பாணத் தமிழரின் 'அப்புக்காத்து அரசியலின்' தொடர்ச்சியாக அவர் இருந்தார்.

திருகோணமலை மாநாடு மிகுந்த எழுச்சி மிக்கதாக இருந்தது. ஆனால், தமிழர் என்னவிதமாக, எவ்வடிப்படைகளில் போராட்டத்தை முன்னெடுப்பது பற்றிய எதுவித கலந்துரையாடல்களும் நிகழவில்லை. செல்வநாயகமும் அதை அறிவிக்கவில்லை. ஆனால், சிங்களம் மட்டுமே சட்டமானது தமிழ்ச் சமூகத்தில் பாரிய எதிர்ப்புணர்வையும் எரிச்சலையும் உண்டு பண்ணியது. இதன் பலன்களை அனுபவித்தது தமிழரசுக் கட்சியே. இதை மட்டும் வைத்தே அடுத்த மூன்று பொதுத்தேர்தல்களில் தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது. இச்சட்டமானதுஎவ்விதவேலைத்திட்டமோ நீண்டகால நோக்கோ இன்றி தமிழ்த்தேசிய அரசியல் இரண்டு தசாப்தங்கள் உணர்ச்சிகர அரசியலில் நகர்வதற்கு வாய்ப்பாக்கிற்று.

வடக்கிலுள்ள பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதை நிறுத்துமாறும் தமிழர் எவரும் சிங்களம் கற்கக் கூடாது என்றும் தமிழரசுக் கட்சி பிரசாரம் செய்தது. ஆனால், ஊருக்குச் சொன்ன உபதேசத்தை வீட்டுக்குள் சொல்ல இயலாத நிலையே தமிழரசுக்கட்சிப் பிரமுகர்களின் நிலையாக இருந்தது. இதைப் புரிந்து கொள்வது முக்கியம்.

இச்செய்தி சொல்கிற செய்திகள் இரண்டு. முதலாவது, தனிப்பட்ட நலன்களின் அடிப்படையில் இலங்கையில் சிங்களம் கற்பதன் தேவையையும் பயனையும் இத்தலைவர்கள் அறிந்திருந்தார்கள். இரண்டாவது, தத்தமது பிள்ளைகளுக்குச் சிங்களம் கற்பிப்பதன் மூலம் வெறும் உணர்ச்சிகர அரசியல் கோஷமாகவே சிங்கள எதிர்ப்பை முன்னிறுத்தினார்கள் என்பது வெளிப்படை.

தமிழ் இளைஞர்களைத் தூண்டுவதன் மூலம் தங்கள் அரசியல் நலன்களை உறுதிசெய்தவர்களால் இந்த உணர்ச்சிகர அரசியல் எவ்வாறான திசையில் நகரும் என்பதைக் கணிக்க இயலவில்லை. மறுபுறம் மொழிப் பிரச்சினை மிகவும் ஆபத்தான திசையில் பயணிப்பதை உணர்ந்த பிரதமர் பண்டாரநாயக்க, அதைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கான முயற்சியில் இறங்கினார். மொழிப் பிரச்சினை தேசிய இனமுரண்பாட்டைப் பகை முரண்பாடாக்கி நீண்டகால பிரச்சினையாக மாற்றும் என்று யாரும் எதிர்பார்க்கவில்லை. அரசியல் தலைமைகள் குறித்த பிரச்சினையைத் தவறாகக் கையாண்டன. சிங்களக் கடும்போக்குத் தேசியவாதமும் தமிழ்த் தேசியவாதத்தின் குறுகிய பார்வையும் மொழிப் பிரச்சினையை இனமுரண்பாடாக்கியமை முக்கிய பங்கு வகித்தன. பண்டாரநாயக்க தமிழரசுக் கட்சித் தலைவர்களைத் தன்னுடன் பேசுவதற்கு அழைத்து ஒரு உடன்படிக்கையைத் தயாரித்தார். அது பண்டாரநாயக்க -செல்வநாயகம் உடன்படிக்கை என அறியப்பட்டது.

அது தழிழரசுக் கட்சி முன்வைத்த நான்கு கோரிக்கைகளான தமிழுக்கும் சிங்களத்துக்கும் சமமான தகுதி, தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை நிறுத்துதல், தமிழரின் பாரம்பரிய பிரதேசமான வட, கிழக்கு மாகாணங்கட்கான சமஷ்டி ஆட்சி, மலையகத் தமிழருக்குப் பூரண வாக்குரிமை ஆகியவற்றின் அடிப்படையில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைகட்குச் சமரசமான ஒரு தீர்வென்று கூறலாம். பண்டா -செல்வா ஒப்பந்தம் என அறியப்பட்ட அதைக் கம்யூனிஸ்ட் கட்சி நிபந்தனையின்றி ஆதரித்தது. சமசமாஜக்கட்சியும் அதை வரவேற்றது என்பதும் முக்கியமானது.

மலையகத் தமிழ் மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்டமையே தமிழரசுக் கட்சியின் தோற்றத்திற்கான காரணம். இன்று அவர்களுக்கு நாளை நமக்கு என்று மலையகத் தமிழர் விடயம் குறித்துப் பேசியதற்காகவே செல்வநாயகம் தீர்க்கதரிசி என்றழைக்கப்பட்டார். திருகோணமலையில் நிறைவேற்றப்பட்ட நான்கு அடிப்படைக் கோரிக்கைகளில் மலையகத் தமிழர்களுக்கு பூரண குடியுரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட வேண்டும் என்பது ஒன்றாக இருந்தது. 1957இல் பண்டாரநாயகவும் செல்வநாயகமும் பேச்சுவார்த்தையின் மூலம் ஒரு உடன்பாட்டுக்கு வந்தபோது இந்தக் கோரிக்கையை விட மற்ற மூன்று தொடர்பிலும் அரசாங்கமும் தமிழரசுக் கட்சியும் சமரசம் செய்து கொள்ள முடிந்தது. மலையகத் தமிழர் சார்பில் பேசத் தமிழரசுக் கட்சிக்கு எந்த அதிகாரமும் இல்லை என்ற அரசாங்க நிலைப்பாட்டை மிக எளிதாகவே தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டது. எந்த ஒரு பிரச்சினை தொடர்பான நிலைப்பாட்டுக்காகச் செல்வநாயகம் தீர்க்கதரிசி என்று கொண்டாடப்பட்டாரோ அந்தப் பிரச்சினையைக் கைகழுவி விட்டு பண்டாரநாயக்கவுடன் உடன்பாடு காண்பதற்கு செல்வநாயகம் தயங்கவில்லை. பண்டா - செல்வா ஒப்பந்தம் பற்றிப் பேசுகிறபோது பலர் பேசத் தயங்குகிற விடயம் இது.

பண்டா - செல்வா ஒப்பந்தமானது வடக்கு, கிழக்கின் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பானவற்றுக்கு ஓரளவேனும் ஏற்புடையதாக இருந்தது. அதன்படி குடியேற்றத் திட்டங்கள் தொடர்பாகக் கணிசமான அளவில் முடிவெடுக்கும் அதிகாரம் உட்படக் குறிப்பிடத்தக்களவு சுயாட்சி உரிமை கொண்ட மாவட்ட சபைகளை நிறுவவும் சிங்களமே அரசகரும மொழியாயிருக்கையில் அரச அலுவல்கட்குத் தமிழைப் பயன்படுத்தும் உரிமைக்கான ஏற்பாடுகளை உண்டாக்கவும் உடன்பாடு காணப்பட்டது.

தமிழரசுக் கட்சி பண்டா - செல்வா உடன்படிக்கையில், மறைமுகமாகவேனும், சிங்களம் மட்டுமே சட்டத்தை ஏற்றுக் கொண்டது என்பது ஒரு முக்கியமான உண்மை. இது நாம் பேசாமல் தவிர்க்கின்ற பேசவிருப்பாத விடயம். தமிழ் மக்களது மொழியுரிமைகளைச் சிங்களமே அரச கரும மொழி என்ற சட்ட வரம்பை மீறாமல் எவ்வாறு பேணுவது என்ற அடிப்படையிலேயே பேச்சுவார்த்தைகள் நடந்தன. இதன் தொடக்கப்புள்ளி தனிச்சிங்களச் சட்டத்தை ஏற்பது. எனவே, செல்வநாயகம் சிங்களம் மட்டுமே சட்டத்தை ஏற்றுக் கொண்டார் என்றே கொள்ள வேண்டியுள்ளது. இந்த அடிப்படையில் வந்தடைந்த முடிவையே இரு தரப்பினரும் ஏற்றுக்கொண்டனர். இது ஒருபுறம் தமிழ் மக்களுக்கு மொழிவெறி ஊட்டிய தமிழரசுப் பிரமுகர்கள் மறுபுறம் தமது நலன்களை மையப்படுத்தி சிங்கள மட்டும் சட்டத்தை உடன்படிக்கையின் வடிவிலே ஏற்றார்கள் என்பதையே காட்டுகிறது.


தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரதேச சபைகளை நிறுவுவது என்ற உடன்பாடு தமிழரசுக் கட்சி கேட்ட சமஷ்டிக் கோரிக்கையைத் திருப்தி செய்யவில்லை. இது புதிதல்ல ஏனெனில் ஆங்கிலத்தில் *Federal Party* (சமஷ்டிக் கட்சி) என்று பெயரிட்டு தென்பகுதிக்கு ஒரு முகங்காட்டி தமிழில் தமிழரசுக் கட்சி என்று பெயரிட்டு மோசடியில் ஈடுபட்ட கட்சி என்ற வகையில் எதிர்பார்க்கக்கூடியதே.

இன்னொருபுறம் வடக்கு, கிழக்கில் பிரதேச சபைகளை நிறுவுவதானது, பேரினவாதத் தலையீடற்ற வளர்ச்சிக்கான வாய்ப்பை தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்குச் சாத்தியமாக்கியது. குறிப்பாக டி.எஸ்.சேனாநாயக்க முன்னெடுத்த திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற நிகழ்ச்சி நிரலுக்கு எதிரான ஒரு அரசியல் எதிர்வினைக்கான தொடக்கப்புள்ளியாக இது இருந்தது. குறிப்பாக சிறுபான்மையினரின் அரசியல் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் நோக்குடனும் அரசியல் பிரதிநிதித்துவத்தைக் குறைக்கும் நோக்குடனும் அரங்கேறிய இக்குடியேற்றங்களைத் தடுக்கும் வாய்ப்பை இந்த உடன்படிக்கை உருவாக்கியது. குறிப்பாக பிரதேச சபைகளுக்கு நிர்வாக அதிகாரம் என்பது அப்பகுதிகளில் இருந்த பெரும்பான்மையான சிறுபான்மையினரின் அரசியல் அதிகாரத்தை உறுதி செய்தது.

இந்த உடன்படிக்கைக்கைக்கான எதிர்ப்பு பண்டரநாயக்காவின் கூட்டாளிகளுக்குள்ளேயே இருந்தது. தனது கட்சிக்குள் ஏற்பட்ட எதிர்ப்பை அவரால் எதிர்கொள்ள முடிந்தது. அரசாங்கத்தில் பங்காளியாக இருந்த கே.எம்.பி.ராஜரத்ன, ஆர்.ஜி.சேனாநாயக்க போன்ற இனவாதிகளும் அந்த உடன்படிக்கையை விரும்பவில்லை. உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு இரு தரப்பிலும் ஒத்துழைப்பு அவசியமாக இருந்தது. அந்த ஒத்துழைப்பைத் தமிழரசுக் கட்சி வழங்கவில்லை. தமிழ் மக்களுக்கான அதிகாரத்தின் தேவை குறித்து சிங்கள மக்களுக்கு எடுத்துரைத்து அதற்கான பொதுக்கருத்தை உருவாக்கத் தமிழரசுக் கட்சி எந்தவொரு முயற்சியையும் எடுக்கவில்லை. தமிழர்களின் பிரச்சினை பாராளுமன்றில் தீர்க்கக் கூடிய ஒரு பிரச்சினை என்பதே அதன் நிலைப்பாடாக இருந்தது.

ஆக எதிர்ப்பைக் கையாண்ட பண்டாரநாயக்கவால் புற எதிர்ப்பைக் கையாள இயலவில்லை. பண்டாரநாயக்க, தேர்தலில் தன்னை ஆதரித்த சிங்களப்பேரினவாத பௌத்தபிக்குமாரில் ஒரு பகுதியினரின் எதிர்ப்பின் முன் பணிந்து அந்த உடன்படிக்கையைக் கிழித்தெறிந்தார். அதற்கு முன் ஜே.ஆர். ஜெயவர்த்தன, இந்த உடன்படிக்கையை எதிர்த்துக் கண்டி யாத்திரையை ஒழுங்கு செய்தார். அதை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்த எஸ்.டி. பண்டாநாயக்கவின் தலைமையில் முறியடிக்கப்பட்டது. இது இலங்கை வரலாற்றில் அதிகம் பேசப்படாத முக்கியமானதொரு நிகழ்வு.

## கடிதங்கள்



### மணல் கடத்தல் அதிகரிப்பு

அம்பாறை மாவட்டத்தில் சட்டவிரோதமாக கடற்கரை மண் கடத்தும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

காலநிலை மாற்றத்தின் போதும் மற்றும் இரவு வேளைகளில் இனந்தெரியாத சிலர் இலக்கத்தகடுகள் அற்ற மோட்டார் சைக்கிள் மற்றும் மாட்டு வண்டிகள் மூலம் அதிகளவான மணல்களை உரப்பையின் உதவியுடன் சட்டவிரோதமாக அள்ளிச்செல்கின்ற செயற்பாடு அதிகரித்துள்ளது.

இச்செயற்பாடானது பெரியநீலாவணை, பாண்டிருப்பு, மருதமுனை , கல்முனை, சாய்ந்தமருது, காரைதீவு, நிந்தவூர் பகுதிகளில் பரவலாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

தற்போது இரவுவேளைகளில் ரோந்து சேவைகள் இடம்பெறாமையினால் இச்சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி கடத்தல்காரர்கள் இச்சட்டவிரோத செயற்பாட்டினை முன்னெடுத்து வருகின்றனர். குறிப்பாகக் கடந்த காலங்களில் பொலிஸார் இராணுவம் கடற்படையினர் இணைந்து கரையோரம் பேணல் மற்றும் கரையோர மூலவளங்கள் முகாமை திணைக்களம் உத்தியோகத்தர்களும் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகள் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

இருப்பினும் அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவரணை முதல் நிந்தவூர் வரையான கடற்கரையோரங்களில் சட்டவிரோதமாக மண்கடத்தல் இடம்பெற்று வருவதுடன் பாரிய மண்ணரிப்புகளும் இப்பகுதிகளில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பித்தக்கது.

– பாறுக் ஷிஹான்

செலான் வங்கியின் வரிக்கு பிந்திய இலாபம்

# ரூ 4.49 பில்லியனாக பதிவு

2023 செப்டெம்பர் 30ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஒன்பது மாத காலப்பகுதியில் வரிக்கு பிந்திய இலாபமாக ரூ. 4.49 பில்லியனை பதிவு செய்திருந்ததாக செலான் வங்கி அறிவித்திருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ. 2.5 பில்லியனுடன் ஒப்பிடுகையில், 79.47% வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. சவால்கள் நிறைந்த பொருளாதார மற்றும் சந்தைச் சூழ்நிலைகளிலிருந்து மீண்டெழுந்திறன் இதனூடாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

2023ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் வங்கி தனது இலாபமீட்டலில் குறிப்பிடத்தக்களவு வளர்ச்சியைப் பதிவு செய்திருந்தது. வரிக்கு முந்திய இலாபம் (PBT) 100% எனும் அபார வளர்ச்சியைப் பதிவு செய்து ரூ. 7.181 பில்லியனாக பதிவாகியிருந்தது. முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியில் இந்தப் பெறுமதி ரூ.3.577 பில்லியனாக காணப்பட்டது. வருமானம் மற்றும் குறைந்தளவு மதிப்பிறக்க கட்டணங்கள் இந்தப் பெறுமதியில் வளர்ச்சியில் அதிகளவு பங்களிப்புச் செய்திருந்தன.

தேறிய வட்டி வருமானம் மற்றும் தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம் போன்றவற்றினூடான வருமானத்தினால், 2023ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாத காலப்பகுதியில் மொத்த தொழிற்படு வருமானத்தை துரிதப்படுத்தியிருந்தன. 2022ஆம் ஆண்டில் ரூ. 35.194 பில்லியனாக பதிவாகியிருந்த இந்தப் பெறுமதி 6.19% இனால் உயர்ந்து ரூ. 37.373 பில்லியனாக பதிவாகியிருந்தது.

2023ஆம் ஆண்டின் முதல் மூன்று காலாண்டு பகுதியில், செலான் வங்கியின் தேறிய வட்டி வருமானம் 9.28% இனால் உயர்ந்து ரூ. 30.554 பில்லியனாக பதிவாகியிருந்தது. கட்டண அடிப்படையிலான வருமானம் 2022 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியில் பதிவாகியிருந்த ரூ.4.520 பில்லியனிலிருந்து 19.29% ஆல் உயர்வடைந்து ரூ.5.392 பில்லியனாக உயர்ந்திருந்தது. இதில் வரவு மற்றும் கடன் அட்டைகளிலிருந்தான வருமானம், வியாபார தரகு வருமானம் மற்றும் வெளிநாட்டு பண அனுப்புகைகளில் உயர்வு போன்றன பங்களிப்புச் செய்திருந்தன. மேலும், மீளாய்வுக்குட்படுத்தப்பட்ட காலப்பகுதியில் வங்கி உறுதியான தேறிய வட்டி எல்லைப் பெறுமதியான 5.98% ஐ பேணியிருந்தது.

வங்கியின் மொத்த செலவுகள் 25.71% இனால் அதிகரித்து ரூ. 13.846 பில்லியனாக பதிவாகியிருந்தது. ஊழியர் அனுகூலங்களில் மேற்கொள்ளப்பட்ட சீராக்கங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள் மற்றும் சேவைகளில் அதிகரித்துச் செல்லும் செலவுகள் போன்றன இதில் பங்களிப்புச் செய்திருந்தன.

2023 செப்டெம்பர் மாதத்துடன் நிறைவடைந்த ஒன்பது மாத காலப் பகுதியில் செலான் வங்கி ரூ. 13.447 பில்லியனை மதிப்பிறக்க கட்டணமாக பதிவு செய்திருந்தன. 2022ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 28.61% பிரதிபலிப்பை பதிவு செய்திருந்தது. பெரும்



பொருளாதாரத்தில் மற்றும் வாடிக்கையாளர்களின் கடன் இடர் கோவைகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்காக மதிப்பிறக்க ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வங்கியின் ஐந்தொகை சிறந்த நிலையில் காணப்பட்டது.

2023 செப்டெம்பர் 30ஆம் திகதியளவில் சொத்துக்கள் வளர்ச்சி ரூ. 693 பில்லியனாக காணப்பட்டது. கடன்கள் மற்றும் முற்பணங்கள் ஆகியன ரூ. 412 பில்லியனாக காணப்பட்டன. வைப்புகள் 3.17% உயர்ந்து ரூ. 565 பில்லியனாக பதிவாகியிருந்ததுடன், ரூபாய் மற்றும் வெளிநாட்டு நாணய வைப்புகளில் முன்னேற்றத்தை பிரதிபலித்திருந்தன.

2023 செப்டெம்பர் 30ஆம் திகதியன்று வங்கியின் பிரதான நிதிசார் விகிதங்கள் மற்றும் குறிகாட்டிகள் உறுதியாக காணப்பட்டன. ஆரோக்கியமான மொத்த மூலதன போதுமை விகிதமாக 15.29% ஐ வங்கி கொண்டிருந்ததுடன், ஆகக்குறைந்த ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளை விட உயர்வாக பதிவாகியிருந்தன. ஒட்டுமொத்த சட்டத்தேவைப்பாட்டு திரள்வு சொத்துக்களின் விகிதம் (SLAR) 39.10% ஆக காணப்பட்டது. இதனூடாக ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகளுக்கமைய வங்கி இயங்குகின்றமை உறுதி செய்யப்பட்டிருந்தது.

கடுமையான பொருளாதார சூழல்களுக்கு மத்தியிலும், பிரதான வருமான மூலங்களில் வங்கி சிறந்த வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. இலாப வளர்ச்சி, வருமானங்கள் மற்றும் வைப்புகளில் வளர்ச்சியும் பதிவாகியிருந்தன. அதன் உறுதியான மூலதன மற்றும் திரள்வு நிலை, கடுமையான நிர்வாக செயற்பாடுகள் போன்றவற்றினூடாக சந்தை தளம்பல்களுக்கு எதிராக மேலதிக இருப்பை பேண உதவியிருந்தன.

## SLT டிஜிட்டல் சேர்விசஸ் உடன் ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd கைகோர்ப்பு

ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd, SLT டிஜிட்டல் சேர்விசஸ் (பிரைவட்) லிமிடெட் உடன் கைகோர்த்துள்ளது. இந்த பங்காண்மையினூடாக, ஹார்ட்வெயார் விற்பனைத்துறையில் ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd கொண்டுள்ள நிபுணத்துவமும், புத்தாக்கமான டிஜிட்டல் தீர்வுகளை வழங்குவதற்கான SLT டிஜிட்டல் சேர்விசஸ் கொண்டுள்ள தொழில்நுட்ப நிபுணத்துவமும் இணைக்கப்பட்டுள்ளது.

தமது இலத்திரனியல் வணிக தீர்வை SLT டிஜிட்டல் சேர்விசஸ் நிறுவனத்துக்கு வழங்கும் தீர்மானத்தினூடாக, ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd இன் தூரநோக்கான வழிமுறை பிரதிபலிக்கப்பட்டுள்ளது. இன்றைய வியாபார சூழலில் ஒன்லைன் வணிகத்தின் முக்கியத்துவம் அதிகரித்துச் செல்வதை கவனத்தில் கொண்டு, நிறுவனத்தினால் தனது டிஜிட்டல் பிரசன்னத்தை மேம்படுத்தி, வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற ஒன்லைன் சொப்பிங் அனுபவத்தை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd இன் தவிசாளர் கலாநிதி. எம்.எச்.ஏ. ரசாக் கருத்துத் தெரிவிக்கையில், “எமது இலத்திரனியல் வணிக செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக SLT டிஜிட்டல் சேர்விசஸ் உடன் கைகோர்த்துள்ளமை தொடர்பில் அறிவிப்பதையிட்டு நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம்” என்றார்.

ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd இன் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.ஆர்.எம். யஷீர் கருத்துத் தெரிவிக்கையில், “வியாபாரங்கள் இயங்கும் முறையில் தொழில்நுட்பம் செல்வாக்கு செலுத்தும் காலகட்டத்தில்,




இடமிருந்து : ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd. இன் பணிப்பாளர் ஏ.ஆர்.எம். ஹபீஸ், SLT டிஜிட்டல் சேர்விசஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி உபுல் மஞ்சநாயக்க மற்றும் ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd இன் தவிசாளர் கலாநிதி. எம்.எச்.ஏ. ரசாக் ஆகியோர் உடன்படிக்கையை பரிமாறிக் கொள்வதுடன், ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd. இன் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.ஆர்.எம். யஷீர் இலத்திரனியல் வணிக இணையத்தள அறிமுக நிகழ்வில் காணப்படுகின்றனர்.

இந்த கைகோர்ப்பினூடாக, எமது வாடிக்கையாளர்களுக்கு முன்னரை விட மேலும் சிறந்த மற்றும் சௌகரியமான சேவைகளை பெற்றுக் கொடுக்க வலுவூட்டுவதாக இருக்கும் என நம்புகின்றோம்” என்றார்.

வியாபார வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியமான டிஜிட்டல் தீர்வுகளை தயாரித்து நடைமுறைப்படுத்துவதில் SLT டிஜிட்டல் சேர்விசஸ் பெருமளவு அனுபவத்தைக் கொண்டுள்ளது. புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் வெற்றிகரமான செயற்பாடுகள் போன்றவற்றுக்கான அவர்களின் அர்ப்பணிப்புகள், ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd இன் இலக்குகளுடன் மிகவும் பொருந்துவதாக அமைந்துள்ளதுடன், ஒப்பற்ற மற்றும் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய இலத்திரனியல் வணிக கட்டமைப்பை உருவாக்க ஏதுவாக அமையும்.

SLT டிஜிட்டல் சேர்விசஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி உபுல் மஞ்சநாயக்க கருத்துத் தெரிவிக்கையில், “ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd இன் இலத்திரனியல் வணிக ஆற்றல்களை மேம்படுத்துவதற்காக இணைந்துள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். வியாபாரங்களை மேம்படுத்தி மாற்றியமைப்பதற்கான நவீன தொழில்நுட்பங்களை வழங்குவதற்கு எமது அணியினர் அர்ப்பணிப்புடன் செயலாற்றுகின்றனர்.

எமது பங்காண்மையினூடாக ஏசியன் ஹார்ட்வெயார் (Pte) Ltd வாடிக்கையாளர்களுக்கு சிறந்த ஒன்லைன் சொப்பிங் அனுபவத்தை பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம்” என்றார்.

## ஒரு குவளை குளம்பி

கருமை முகில் திரள
வாடைக்காற்று மேனி தழுவ
வானம் தனது கொடையை பொழிய
மனம் எதையோ நாட
கண்கள் அதை தேட
தனிச்சையாய் கால்கள் விரைய
எனக்காகவே காத்திருந்த அவளை
அவளுக்காவே காத்திருந்த என் விரல்கள்
தாமதமின்றி வாரிப் பிடிக்க
இதமான பொழுதோடு
மணமான சுவையோடு
என் இதயம் இனிதாக்கி
என் உடல் சூடாக்கியது



கேஷானி தினூஷிகா




## காத்திரு

தாலி செய்ய சொல்லிவிட்டேன்
நல்ல நாளும் பார்த்துவிட்டேன்
சிலருக்கு சேதி சொல்லியாச்சு
நாலஞ்சு பேர்தான் பாக்கியிருக்கு

பந்திவைக்க காய்கறிக்கு சொல்லியிருக்கு
நாலாம்நாள் விருந்திற்கும்
ஆடொன்று அவிட்டிருக்கு
போட்ட உடையோடு நீவந்தால் போதும்
ராணியாட்டம் நான் பார்த்திடுவேன்
என் மாமன் மாமிக்கும் சொல்லிவை
பந்தல் போட கிடுகுமரம்
வாங்கி வைக்கச் சொல்லிவை



க.ஜெயகாந்தராஜா



## அச்சம் தவிர்

அடங்கிட மறு அடைக்கலம் கொடு
அறிவாய் நெறி தெரிவாய் வழி
உள்ளதை அறி உலகத்தை மதி
உடைத்திடு  தடை உனக்கேது கேடு

பயத்தின் தடம் பிடித்திடும் வடம்
பயணம் நிதம் பாதைகள் விதவிதம்
ஆண்மை தவறேல் அறத்தினை மறவேல்
ஆயிரம் வேலிகள் அதற்குள் போலிகள்

நாடக உலகு நடிப்பதில் விலகு
நடப்பதை கவனி செயற்படு இனி நீ
படைத்தவன் இறைவன் நடப்பவன் மனிதன்
படைக்களப் போரே வாழ்க்கையின் ஒழுங்கு

எதற்குமே முடிவு உண்டென உணரு
ஏறியே மிதித்தால் மீறியே உதைத்திடு
உனக்கான வலிமை உன்னுடன் உள்ளது
வாழ்வது ஒருமுறை சாவதோ பலமுறை

பயத்தின் வேர்களை பருவத்திலே களைந்திடு
பதறாதே காரியம் உதவாது போய்விடும்
நம்பிக்கை வைத்திடு தைரியம் கொண்டிரு
நாளையும் வெல்வாய் அச்சத்தை தவிர்த்திடு...



தெ.கரிதரன்
(சம்பூர் சமரன்),
திருகோணமலை.

## எது மனிதம்

கடவுளின் கைவேலைப்பாட்டு பொம்மைகள்
இது ஆனால் அவன் முகமூடி மனிதராய் உலாவி
நாள்தோறும் தன் அட்டூழிய
வேலையை செய்து சாதிக்கிறான்

காசு பணத்தாசை கொண்டு கார், பங்களா தேடி
மற்றோர் சொத்தையும் சுருட்டிட
கண் விழித்து திட்டம் தீட்டுகிறான்

ஒருவரிடம் ஒரு பேச்சு இன்னொருவரிடம்
அவனைப் பற்றி குறைபேச்சு ஏன்  இந்த வீண் பேச்சு
நம்பிக்கையில்லா மனிதம் நன்றியில்லா மனித குலம்

மனிதனை மனிதன் காட்டிக்கொடுப்பு,
விரட்டியடிப்பு ஏன் அவனை நல்லவனாக்க
உன் மனம் எண்ணவில்லையா?

சாதி எனும் தீயில் கொன்று அவனை சகதிக்குள்
தள்ளுகிறான் பட்டினியில் சாவோரை
பாராமல் செல்லுகிறான்
மனிதனின் துயர் கண்டு கொஞ்சமும்
கசியாத மனித மனம்

தத்துவம் பேசவும் தண்டனை வழங்கவும்
குறைவில்லை மனிதா நீயும்
மனித குலம்  மறக்காதே
மனிதத்தை நேசி மானிடம் வளரட்டும்
மாண்புறம் அடையட்டும்

எண்ணத்தில் நல்லெண்ணம் கொண்டவன் மனிதன்
பேச்சில் உறுதி உடையவன் மனிதன்
நடத்தையில் நன்நடத்தை கொண்டவன் மனிதன்
இதை உணர்ந்து வாழ்ந்தால்
புனிதனாக போற்றப்படுவான்



ஆஷா அனிஸ்டன்

சிரியா

# சிரியாவில் குண்டுமழை



மத்திய கிழக்கு பகுதிகளில் உள்ள பெரும்பாலான நாடுகளில் ஈரான் ஆதரவு பெற்ற ஆயுதம் ஏந்திய பயங்கரவாத குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. ஈராக், சிரியா உள்ளிட்ட நாடுகளில் பயங்கரவாதிகளை ஒழிப்பதற்காக அமெரிக்கா தனது துருப்புகளை நிறுத்தியுள்ளது.

அமெரிக்க வீரர்கள் தங்கியிருக்கும் வீடுகள் மற்றும் இராணுவ நிலைகள் மீது ஈரான் ஆதரவு பயங்கரவாதிகள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகிறார்கள். அதுபோன்று நடத்தப்படும் தாக்குதலுக்கு அமெரிக்காவும் பதிலடி கொடுத்து வருகிறது.

அந்த வகையில், சிரியாவில் ஈரான் ஆதரவுடன் செயல்பட்டு வரும் பயங்கரவாத குழுக்களின் நிலைகள் மீது அமெரிக்கா வான்தாக்குதல் நடத்தியது. இதில் 9 பேர் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இரண்டு அமெரிக்க எஃப்-15 போர் விமானங்கள் சிரியாவில் குண்டுமழை பொழிந்ததாக, அமெரிக்காவின் பாதுகாப்பு செயலாளர் தெரிவித்துள்ளார். கடந்த இரண்டு வாரங்களில் அமெரிக்காவின் இரண்டாவது தாக்குதல் இதுவாகும்.

காசா

# “130 சுரங்கங்கள் அழிப்பு”

‘எக்ஸ்’ ஊடகத்தில் இஸ்ரேல் இராணுவத்தின் தலைமை செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி வெளியிட்டுள்ள பதிவில், “காசாவில் தரைவழி தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் தொடங்கியதிலிருந்து இதுவரை ஹமாஸ் அமைப்பினரால் உருவாக்கப்பட்டுள்ள 130 சுரங்கப்பாதை நிலைகள் அழிக்கப்பட்டுள்ளன.

அங்கு சண்டையிட்டு வரும் வீரர்களுடன் இஸ்ரேல் இராணுவத்தின் பொறியாளர்கள் குழுவும் சென்றுள்ளது.

அந்தக் குழு, மற்ற வீரர்களுடன் இணைந்து காசாவிலுள்ள ஹமாஸ் அமைப்பினரின் சுரங்க நிலைகள் மற்றும் ஆயுதங்களை அழிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன.

இஸ்ரேல் இராணுவத்தின் தரைவழித் தாக்குதல் நடவடிக்கையால், பூமிக்கு அடியில் ஹமாஸ் அமைத்துள்ள பயங்கரவாத உள்கட்டமைப்பு தகர்க்கப்பட்டு வருகிறது” என தெரிவித்துள்ளார்.



பிரேசில்

# மாற்று பாலினத்தவரும் ஞானஸ்நானம் பெறலாம்



மாற்று பாலினத்தவரும் கத்தோலிக்க ஞானஸ்நானம் பெற வத்திக்கானின் கோட்பாட்டு அலுவலகம் ஒப்புதல் அளித்துள்ளது. அவர்களே ஞானப் பெற்றோராக இருந்தும் தமக்குத்தாமே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வழிவகுக்கப்பட்டுள்ளது. மேலும், அவர்கள் கத்தோலிக்க திருமணங்களில் சாட்சிகளாக இருக்கவும் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த ஜோசப் நெக்ரி என்ற பாதிரியார் ஒருவர் கடந்த ஜூலை மாதம் 6 கேள்விகள் அடங்கிய ஒரு தொகுப்பை வத்திக்கானுக்கு அனுப்பியிருந்தார். அதில் தன்பாலின ஈர்ப்பாளர்கள் குறித்தும், அவர்களுக்கு ஞானஸ்நானம் வழங்குதல் குறித்தும் கேட்கப்பட்டிருந்தது. இந்த கேள்விகளுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் வத்திக்கானின் நம்பிக்கைக்கான கோட்பாட்டுத் துறை பதிலளித்துள்ளது.

மதுரை

# பறக்கும் நுரை



மதுரை மாவட்டம் அவனியாபுரம் அருகே அயன்பாப்பாகுடி தொடர்ந்து மழை பெய்து வருவதையடுத்து, கண்மாயில் பஞ்சு போன்ற வெண்மை நிற நுரை உருவாகி, அவை மலைபோல் குவிந்து வருகிறது.

இந்த நுரையானது காற்றில் பறந்து மதுரை விமான நிலையம் செல்லும் வீதியில் வாகன ஓட்டிகள் மீது விழுகிறது. இதனால் வாகன விபத்துகளும் ஏற்பட வாய்ப்பு இருப்பதாக அஞ்சப்படுகிறது.

இதுகுறித்து அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது.

கேரளா

# “பழிவாங்கவே நாடு திரும்பினேன்”



கேரள மாநிலம் எர்ணாகுளம் மாவட்டம் களமச்சேரியிலுள்ள கிறிஸ்தவ சபை ஒன்றில் கடந்த மாதம் 29ஆம் திகதி நடந்த குண்டுவெடிப்பில் 3 பெண்கள், சிறுமி என 4 பேர் பலியாகினர்.

இது தொடர்பாக கொச்சியை சேர்ந்த டொமினிக் மார்ட்டின் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரை 10 நாள் காவலில் வைத்து விசாரிக்க பொலிஸாருக்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

இந்த நிலையில், கிறிஸ்தவ சபையின் நடவடிக்கை பிடிக்காததால் அந்த சபையை பழிவாங்குவதற்காகவே வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்ததாகவும், அவர்கள் நடத்திய பிரார்த்தனை கூட்டத்தில் குண்டுவெடிப்பை நிகழ்த்தியதாகவும் வாக்குமூலம் அளித்திருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மத்திய பிரதேசம்

# “பொருளாதார வல்லரசாக இந்தியா உருவெடுக்கும்”



இந்திய மத்தியபிரதேசத்தின் தாமோ நகரில் புதன்கிழமை (08) நடந்த பிரசார பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி உரையாற்றியுள்ளார். அப்போது, “கடந்த பேரவை தேர்தலில் சட்டீஸ்கரிலும், ராஜஸ்தானிலும் காங்கிரஸிடம் ஆட்சியை மக்கள் ஒப்படைத்தனர். அவர்கள் மக்களின் நலத்திட்டங்களை செய்யாமல், சூதாட்டம், கறுப்பு பணம் பதுக்கல் ஆகியவற்றில் ஈடுபட்டது.

2014ஆம் ஆண்டு ஒன்றியத்தில் பா.ஜ.க ஆட்சி அமைத்த பிறகு உலகில் 10ஆவது இடத்தில் இருந்த இந்திய பொருளாதாரம் 200 ஆண்டுகளுக்கும் மேலாக இந்தியாவை ஆட்சி செய்த இங்கிலாந்தை பின் தள்ளி 5ஆவது இடத்துக்கு உயர்ந்தது. இதைக்கண்டு உலக நாடுகள் ஆச்சரியப்பட்டன. ஆனால், அதைப்பற்றி எதிர்க்கட்சியினர் பேசுவதில்லை. இலவச ரேஷன் திட்டத்தை 5 ஆண்டுகளுக்கு நீட்டித்தது பற்றி தேர்தல் ஆணையத்திடம் காங்கிரஸ் புகார் அளிக்க போவதாக தெரிவித்துள்ளது.

அவர்கள் உலகின் எந்த நீதிமன்றத்துக்கு சென்றாலும் 80 கோடி மக்களுக்கு அடுத்த 5 ஆண்டுகளுக்கு இலவச ரேஷன் தொடர அனைத்தையும் செய்வேன். ஊழலுக்கு எதிராக தொடர்ந்து போராடுவேன். 2024 மக்களவை தேர்தலில் நான் மீண்டும் பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டால் இந்தியாவை உலகின் 3வது பெரிய பொருளாதார நாடாக மாற்றுவேன்” என்று உறுதியளித்தார்.

# இகா ஸ்வியாடெக் சாம்பியன்



மெக்சிகோ, பல முன்னணி வீராங்கனைகள் பங்கேற்றிருந்த டபிள்யூ.டி.ஏ டென்னிஸ் தொடர் கடந்த மாதம் 29ஆம் திகதி ஆம்பமாகி, புதன்கிழமை (08) நிறைவடைந்தது. இந்த தொடரின் இறுதிப்போட்டிக்கு போலந்து நாட்டை சேர்ந்த இகா ஸ்வியாடெக் மற்றும் அமெரிக்க வீராங்கனை பெகுலா முன்னேறினர்.

தங்களது அரையிறுதி ஆட்டங்களில் இகா ஸ்வியாடெக் - சபலென்காவையும், பெகுலா - கோகோ காப்பையும் வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றனர். இறுதிப்போட்டியில் ஸ்வியாடெக் பெகுலாவை எளிதில் வீழ்த்தினார். 59 நிமிடங்கள் நடந்த இந்த போட்டியில் ஸ்வியாடெக் 6-1 மற்றும் 6-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். இந்த வெற்றியின் மூலம் ஸ்வியாடெக் பெண்களுக்கான டென்னிஸ் தரவரிசையில் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளார்.

# முதலிடத்தில் ஹாலண்ட்



பிரிமியர் லீக் கால்பந்து போட்டிகளின் 20 ஆவது போட்டி வாரத்தில் மான்செஸ்டர் சிட்டி மற்றும் வோல்வ்ஸ் அணிகள் மோதிய போட்டியில் மான்செஸ்டர் சிட்டி இளம் நட்சத்திர வீரர் எர்லிங் ஹாலண்ட் இன் ஹாட்ரிக் கோல்களின் உதவியுடன் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி ஈட்டியுள்ளது.

மான்செஸ்டர் டார்பி இல் அடைந்த தோல்வியின் பின்னர் அடுத்தடுத்த போட்டிகளில் வெற்றியீட்டி மான்செஸ்டர் சிட்டி மீண்டும் பிரிமியர் லீக் கிண்ணத்துக்கான ஓட்டத்தில் இணைந்துள்ளது.

# முதலிடத்தில் முகமது சிராஜ்



ஒருநாள் போட்டிக்கான பேட்ஸ்மேன்கள் மற்றும் பந்து வீச்சாளர்களின் புதிய தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் வெளியிட்டது.

பேட்ஸ்மேன்கள் பட்டியலில் இந்தியாவின் இளம் வீரர் சுப்மன் கில் முதல் இடம் பிடித்து அசத்தியுள்ளார். இந்நிலையில், பந்துவீச்சாளர்கள் பட்டியலில் இந்தியாவின் முகமது சிராஜ் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார்.

தென் ஆப்பிரிக்காவின் கேசவ் மகாராஜ் 2ஆவது இடத்திலும், ஆஸ்திரேலியாவின் ஆடம் ஜாம்பா 3ஆவது இடத்திலும் உள்ளனர். இந்தியாவின் குல்தீப் யாதவ் 4ஆவது இடத்திலும், பாகிஸ்தானின் ஷாகின் அப்ரிடி 5ஆவது இடத்தில் உள்ளனர்.



# “கடினமான முடிவு”

அவுஸ்திரேலிய பெண்கள் கிரிக்கெட் அணியின் வெற்றிகரமான தலைவராக வலம் வந்த மெக் லானிங் தனது ஓய்வு முடிவை தீடிரென அறிவித்துள்ளார். 31 வயதான அவர், அவுஸ்திரேலிய அணிக்காக 182 சர்வதேச போட்டிகளில் தலைவராக செயல்பட்டுள்ளார். 2010ஆம் ஆண்டு தனது 18 வயதில் அவுஸ்திரேலிய அணிக்காக அறிமுகமான மெக் லானிங், 13 ஆண்டு கால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கைக்கு ஓய்வை அறிவித்துள்ளார். 2014இல் அவுஸ்திரேலியாவை முதன்முதலில் வழிநடத்திய லானிங், பெண்கள் கிரிக்கெட்டில் வெற்றிகரமான தலைவராக வலம் வருகிறார். 78 ஒருநாள் போட்டிகளில் 69 வெற்றிகள், 100 டி20 போட்டிகளில் 76 வெற்றிகள் மற்றும் 4 டெஸ்ட் போட்டிகளில் ஒரு வெற்றி என அவுஸ்திரேயாவை வெற்றிகராமாக வழிநடத்தி உள்ளார்.

மேலும் அவர் தனது தலைமைத்துவத்தில் அவுஸ்திரேலிய அணிக்கு நான்கு டி20 உலகக்கோப்பைகள், ஒரு 50 ஓவர் உலகக்கோப்பை மற்றும் கடந்த ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்று கொடுத்துள்ளார்.

ஓய்வு குறித்து அவர் கூறுகையில், “சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து விலகுவது என்பது கடினமான முடிவு. 13 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை அனுபவித்த நான் நம்பமுடியாத அதிர்ஷ்டசாலி. அதனால் ஓய்வு பெற இப்போது சரியான நேரம் என்று எனக்குத் தெரியும். என்னால் சாதிக்க முடிந்ததைப் பற்றி நான் பெருமைப்படுகிறேன்’ என்று தெரிவித்துள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை 10 நவம்பர் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.